**கிழக்கு மாகாணத்தில் ஐந்து பாலங்களின் மீள்நிர்மாண செயற்திட்டம் - 2014**

கிழக்கு மாகாணத்தில் ஐந்து பாலங்களின் மீள் நிர்மாண செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஐப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவருக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 19 மற்றும் 2010 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட இல. 0961400 மற்றும் இல 1060720 ஆகிய இரு மானிய உடன்படிக்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கைகளின் படி, முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சான தற்போதைய பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் 02 வரிசை வீதிகளாக முன்னேற்றப்பட வேண்டிய நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பாலங்களை புனரமைப்பதன் மூலமும் கிழக்கு மாகாணத்தில் பணிச்சங்கேணி நீர் மேவும் பாதையை முன்னேற்றுவதன் மூலமும் கிழக்கு மாகாணத்திற்கான இணைப்பை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். மானிய உடன்படிக்கைகளின்படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 1,930 மில்லியனிற்குச் சமனான ஐப்பான் யென் 1246 மில்லினானதுடன் மொத்த தொகையும் ஐப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரால் நிதியளிக்கப்பட வேண்டுமென்று உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபாரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

மீளாய்வாண்டில் செயற்திட்டத்தால் செலவிடப்பட்ட ரூபா 2.36 மில்லியன் தொகையான விளம்பரச் செலவுகள் நிதிக்கூற்றுக்களில் திறப்பு விழா செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்த உதவு தொகையிலிருந்து ஒப்பந்த உடன்படிக்கையின் 08 ஆம் உறுப்புரைக்கு முரணாக ஒப்பந்தக்காரர்களுக்கு பதிலாக செயற்திட்டம் ரூபா 29.64 மில்லியன் தொகையான வருமான வரிகளைச் செலுத்தியிருந்தது.

(ஆ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் மற்றும் 2000 சனவரி 31 ஆம் திகதிய பிஎவ்/பிஈ/06 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக ஆலோசனையாளர்களின் சம்பளத்திலிருந்து கழிக்காமல் செயற்திட்டத்தால் ரூபா 8.22 மில்லியன் தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதிக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான விதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பான் ஜென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் ஜென் மில்லியன் | ரூபா மில்லியன | ஜப்பான் ஜென் மில்லியன் | ரூபா மில்லியன |
| ஜேஐசீஏ | 1,246 | 1,930 | - | - | - | 1,433.4 | 1,612.5 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 2,064 | 1,835 | 2,064 | 235.8 | 265.2 |
| மொத்தம் | 1,246 | 1,930 | 2,064 | 1,835 | 2,064 | 1,669.2 | 1,877.7 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

முன்னேற்ற அறிக்கையின்படி, கண்டி – மகியங்கணை – பதியந்தலாவ வீதியிலுள்ள 5 பாலங்களின் மீள்நிர்மாணம் வேலைகள் 2013 யூனில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் மீள்நிர்மாணங்களின் குறைபாட்டு பொறுப்புக் காலப் பகுதியும் 2014 யூனில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கை 2015 ஓகஸ்த்து 31 வரையிலும் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பணிச்சங்கேணிய பாலத்தை இடித்தகற்றுவதற்கு ரூபா 44.92 மில்லியனிற்குச் சமனான ஜப்பான் ஜென் 35.94 மில்லியன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அழிக்கப்பட்ட பாலத்திலிருந்து எடுக்கப்பட்ட பொருட்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் செயலாளர் அவை பயன்படுத்தபபட முடியாத நிலைமையிலிருந்த படியால் அந்தப் பொருட்கள் கைவிடப்பட்டன என்று 2014 ஓகஸ்த்து 05 இல் விளக்கமளித்திருந்தார். எனினும், கைவிடப்பட்ட பொருட்களின் பட்டியலோ அல்லது அதற்கான முன் அனுமதியோ கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிச்சங்கேணி நிர்மாண வேலைத்தளத்தில் தற்காலிகமாக ஒப்பந்தக்காரால் பயன்படுத்தப்பட்ட 80 மீற்றர் நீளமான வெயிலி பாலத்தின் கட்டமைப்பு மற்றும் பொருட்கள் பால நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் செயற்திட்டத்திற்கோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையிற்கோ கையளிக்கப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

## 3.4 செயற்திட்டநோக்கங்கங்களிருந்து விலகி பயன்படுத்தப்பட்ட நிதிகள்

இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்த உதவுதொகையிலிருந்து செயற்திட்டத்தால் செலவிடப்பட்ட ரூபா 12.74 மில்லியன் கூட்டுத்தொகையான ஹோட்டல் கட்டணங்கள் மற்றும் விளம்பரச் செலவுகள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை.

## 3.5 முன்னைய கணக்காய்வில் முக்கியத்துவப்படுத்தப்பட்ட தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்

பிழையான பணப்பரிமாற்ற விகிதங்களைப் பயன்படுத்தாமையால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு 2013 இல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 534,617 கூட்டு மொத்தத் தொகையான பெறமதி சேர்வரியின் மேலதிகக் கொடுப்பனவுகள் 2014 திசெம்பர் 31 இல் வரையிலும் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை.